DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 467/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | ரவி |
| Father / Husband Name | ராமலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 06.11.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** 12.07.2024 ம் தேதி நடந்த நிகழ்வின் போது செல்வம் என்பவர் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த pendrive–வில் உள்ள வீடியோ நீதிமன்றத்தில் உள்ள கணினியில் போட்டு பார்த்தபோது அதிலிருந்த வீடியோ play ஆகவில்லை, நான் அந்த வீடியோவை சரியாக எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த pendrive மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. புகார்தாரர் தரப்பில் எனக்கு நெருக்கடி கொடுத்த கட்டப்பஞ்சாயத்துகாரர்கள், அரசியல் பிரமுகர்கள் யார் என்றால் அவர்கள் எனக்கு அறிமுகம் இல்லாதவர்கள். கட்டப்பஞ்சாயத்துகாரர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோர்கள் எனக்கு நெருக்கடி கொடுத்து ஆவணத்தில் கையெழுத்து கேட்டதாக என்னுடைய அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் புகார்தாரருக்கு வழக்கு காசோலையில் கண்ட தொகையை திரும்ப செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் அவரிடம் பணத்தை வாங்கிவிட்டு சீட்டு என்ற பெயரில் அவரை ஏமாற்ற முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. நானும் புகார்தாரரும் ஒன்றாக படித்தோம் என்றால் இல்லை. புகார்தாரரிடம் நான் பெற்ற கடனை ஏமாற்றவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெற்ற கடனுக்காக தான் வழக்கு காசோலையை வழங்கினேன் என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தே காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காசோலை மோசடி செய்ததால் தண்டிக்கத்தக்கவர் என்றால் சரியல்ல.